DEPOSITION OF WITNESS

அரக்கோணம் குற்றவியல் நடுவர் எண்.1 நீதிமன்றம் 2025 ஆம் ஆண்டு மே மாதம் திங்கள்கிழமை 12ம் நாள் சாட்சியாகிய உதயசூரியன் என்பவரின் வாக்குமூலம் 1983 ஆம் ஆண்டு 10வது சட்ட விதியின்படி திருமதி. K.மம்தா Gr–III பென்ச் கிளார்க், என்பவரால் பிரமாணம் செய்விக்கப்பட்டு பதிவு செய்யப்படுகிறது.

| | | | |
|---|---|---|---|
| பெயர் | உதயசூரியன் | வயது | 55 |
| த/பெ. | ஆறுமுகம் | இனம் | ஆண் |
| கிராமம் | கிழவனம் | தொழில் | விவசாயம் |
| சமயம் | | தாலூக்கா | |

**C.C.111/2023**

(எதிரிகள் நீதிமன்றத்தில் ஆஜர். எதிரிகள் வழக்கறிஞர் நீதிமன்றத்தில் ஆஜர் இல்லை).

**<u>முதல் விசாரணை 12.05.2025 அ.சா.3</u>**

1. நான் கிழவனத்தில் வசித்து வருகிறேன். அ.சா.1 வினாயகம் எனது பக்கத்து வீட்டை சேர்ந்தவர். எனக்கு வழக்கு பற்றி எதுவும் தெரியாது. போலீசார் என்னை விசாரிக்கவில்லை. வினாயகத்துக்கும், மணிக்கும் நடந்த தகராறு காரணமாக ஒன்னரை வருடங்களுக்கு முன்பு போலீசார் என்னிடம் கையொப்பம் கேட்டார்கள். நான் போட்டுக் கொடுத்தேன்.

**(மேற்படி சாட்சியை பிறழ் சாட்சியாக குறுக்கு விசாரணை செய்ய அரசு தரப்பில் கோரிக்கை செய்யப்பட்டு பரிசீலனை செய்து குறுக்கு விசாரணை செய்ய அனுமதி வழங்கப்பட்டது)**

**<u>குறுக்கு விசாரணை அரசு தரப்பில்–</u>**

2. 26.05.2023ம் தேதி மாலை 6.30 மணிக்கு எதிரிகள், அ.சா.1 வினாயகத்தை அசிங்கமாக பேசி 1வது எதிரி வெட்டுக் கத்தியால் தலையில் வெட்டி, கொலை மிரட்டல் விடுத்தார்கள் என்றால் எனக்கு தெரியாது.

3. போலீஸ் விசாரணையில் சம்பவம் பற்றி கேள்விபட்டதாக தெரிவித்துவிட்டு தற்போது எதிரிகளுக்கு ஆதரவாக சாட்சியம் அளிக்கிறேன் என்றால் இல்லை.

**<u>எதிரிகள் தரப்பில் குறுக்கு விசாரணை</u>**

4. எதிரிகள் ஆஜராகி குறுக்கு விசாரணை செய்ய முன்வராததால் குறுக்கு விசாரணை முடித்துக்கொள்ளப்பட்டது.

**<u>மறு விசாரணை :</u>** இல்லை.

Taken down by me/before me
in Open Court,
Interpreted/read over
to the witness and admitted by
the deponent to be correct.

Judicial Magistrate No.I,
Arakkonam.